பக்கங்கள்: நான்கு

Registered sa a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5 பிரமோதூத ஸ்ரீ ஆவணி மீ 21 உ வியாழக்கிழமை (06-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 16 கதிர்: 187

# இடம்பெயர்ந்தோருக்கு இன்று முதல் நிவாரணம்

## அரிசி வந்தது!

யாழ்ப்பாணம், செப். 6

கிளிநொச்சியில் இருந்து குடாநாட்டுக்கு அரிசி வரத் தொடங்கியுள்ளது.

இருபதுச்கும் மேற்பட்ட டிராக்டர்கள், மற்றும் தனியார் வாகனங்கள்மூலம் நேற்று அரிசி மூடைகள் யாழ். நகருக்குக் கொண்டு வரப்பட்டன.

இதனால் அரிசிவிலை பெரும் வீழ்ச்சியடையும் எனஎதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-6)

## வருமானம் இழந்தோருக்கும் இலவசப் பங்கீடு கிடைக்கும்

யாழ்ப்பாணம், செப். 6

**யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோருக்கான இரண்டாம் கட்ட நிவாரணம் இன்று முதல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படவிருக்கிறது.**

**வருமானம் இழந்தோருக்கும் இந்த இலவசப் பங்கீடு கிடைக்கும்.**

நேற்று மாலை யாழ்- மேலதிக அரசாங்க அதிபர் திரு. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இது பற்றிய முடிவு எடுக்கப்பட்டது.

நிவாரணம், பங்கீடுஎன்பன சம்பந்தமாக2-9-90 இல் அரச அதிபரால் அனுப்பப்பட்ட சுற்றுநிருபத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்துடனான முடிவுகள் வருமாறு:-

★ இடம்பெயர்ந்தோர், உதவி அரசாங்க அதிபர் வழங்கிய இரண்டாம் கட்ட நிவாரண பெர்மிட்டுகளைக் காட்டி இன்று முதல் பொருள்களைப் பெறலாம். பொருள்கள் பங்கீட்டு அடிப்படையில் இலவசமாக வழங்கப்படும்.

★ நாளாந்தம் உழைத்து இப்போது வருமானம் இழந்துள்ளவர்கள், மாதச் சம்பளம் பெற்று இப்போது தொழில் இழந்துள்ளவர்கள் ஆகியஇருவகையினரும் கிராம சேவையாளர் மூலம் உதவி அரசாங்க அதிபர்கள் வழங்கும் விசேடபெர்மிட்டுகளைப்

[2 ஆம் பக்கம் பார்க்க]

### உடன் நிறுத்தம்

இப்போது நடைமுறையில் உள்ள உணவுப் பங்கீட்டு முறை நிறுத்தப்பட்டுள்ளது. புதிய திட்டமே இன்று முதல் அமுலுக்கு வரும் என்று மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதனும், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ப. லிங்கநாதனும் அறிவித்துள்ளனர்,

## ஸ்ரீலங்கா சரக்குக் கப்பலில் ஒட்டிக்கொண்டு வந்த தமிழர்

யாழ்ப்பாணம், செப். 6

திருகோணமலையில் இருந்து ஸ்ரீலங்கா சரக்குக் கப்பல் ஒன்றில் எவருக்கும் தெரியாமல் தமிழர் ஒருவர் ''நைசாக ஒட்டிக்கொண்டு'' பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தார்!

இது பற்றித் தெரிய வருவதாவது:-

திருகோணமலையில் நிர்க்கதியான நிலையில் கடந்த சுமார் மூன்று மாதங்களாக சிக்குண்டிருந்த காரைநகர் வாசி, தமது குடும்பத்தினரைப் பார்க்க தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தார்.

திடீரென அவர் ஒரு முடிவுக்கு வந்தார். எப்பாடுபட்டும் ஸ்ரீலங்கா கப்பலில் பயணம் செய்து

(2 ஆம் பக்கம் பார்க்க)

## 3 சிப்பாய்கள் கால் இழப்பு

யாழ்ப்பாணம், செப். 6

திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற இரு சம்பவங்களில் விடுதலைப்புலிகளின் மிதிவெடியில் சிக்கி மூன்று இராணுவச் சிப்பாய்கள் தமது கால்களை இழந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆலங்கேணியில்ஒருசிப்பாயும், நேற்று கண்டலடியூற்றில் இரண்டு சிப்பாய்களும் தமது கால்களை இழந்ததாகக்கூறப்பட்டது, (உ)

## முல்லைத்தீவு கிராமங்களில் படையினர் தீ வைப்பு!

யாழ்ப்பாணம், செப். 6

முல்லைத்தீவு நகரை அண்டியுள்ள கிராமங்கள் பலவற்றில் இராணுவத்தினர் புகுந்து அங்குள்ள கிராமவாசிகளின் வீடுகளையும், உடைமைகளையும் தீயிட்டுவருவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கரையோரக் கிராம மீனவர்களின் வலைகள், வள்ளங்கள் என்பனவும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

முற்றுகைக்கு உள்ளாகியிருந்த முல்லைத்தீவு இராணுவ முகாமை அரச படைகள் மீட்டிருப்பதாகவும் —

நகரைக் கைப்பற்றியிருப்பதாகவும் திங்கள் இரவு இலங்கை அரசு அறிவித்தது தெரிந்ததே.

தற்போது முல்லைத்தீவு நகரைச் சூழவுள்ள புறநகர்ப் பகுதிகளில் கடும் மோதல் நடைபெற்று வருவதாகவும்—

இந்த மோதலில் பல சிப்பாய்கள் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுவதாகவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (உ)

## அறந்தலாவயில் தாக்குதல்; ஆறு சிப்பாய்கள் பலி!

அனுராதபுரம் மாவட்டம் அறந்தலாவயில் விடுதலைப்புலிகள் நடத்திய கடும் தாக்குதல் ஒன்றில் ஆறு சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்றும்—

வவுனியாவில் நடந்த தாக்குதலில் ஒரு சிப்பாய் படுகாயமடைந்தார் என்றும் இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த ஆறு சிப்பாய்களிடமிருந்த ரி-56 ரக துப்பாக்கிகளை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றனர் என்றும் கூறப்பட்டது.

முல்லைத்தீவுப் பகுதியில் விடுதலைப்புலிகளின் பதுங்குகுழி ஒன்றை இராணுவம் சோதனையிட்ட போது பெரும் குண்டு ஒன்று வெடித்துஒருசிப்பாய் கொல்லப்பட்டார் என்றும் பல சிப்பாய்கள் படு காயமடைந்தனர் என்றும் கூறப்படுகிறது. (ஒ-எ)

## மண்டைதீவு ஷெல்லுக்கு படுகாயம்

யாழ்ப்பாணம், செப்.6

மண்டைதீவில்நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால் நேற்றுக் காலை ஏவப்பட்ட ஷெல் கொட்டடிப்பகுதியில் விழுந்து வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

கொட்டடி கண்ணாபுரத்தைச் சேர்ந்த செல்வராசா தர்மகுலராசா(வயது 27) என்பவரே படுகாயமடைந்தவராவார். (இ-15)

## யாழ். நகரில் சரக்கு விமானம் இலக்கு இன்றி குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், செப். 6

சீனத் தயாரிப்பான வை-12 சரக்கு விமானம் ஒன்று நேற்றுக்காலை சுமார் 8 மணி முதல் 8. 30 மணிவரை யாழ். நகரப் பகுதியில் குண்டுகளை வீசித் தள்ளியது.

நேற்று வந்த இந்த விமானத்தைக் கண்ட மக்கள் 'இராட்சத சகடை' மீண்டும் வந்து விட்டது என நினைத்து பெரும் பதற்றமுற்றனர்.

'சகடை' விமானம் அல்ல என்று தெரிந்தவுடன் ஆறுதலடைந்த மக்கள் குண்டுகள் வீசப்படுவதைப் பார்த்தபடி நின்றனர்.

இலக்கு இன்றி வீசப்பட்ட இந்தக் குண்டுகள் சன சஞ்சாரமற்ற நகரப் பகுதியில் விழுந்து வெடித்தன.

இந்த விமானம் குடாநாட்டின் பல பகுதிகள் மீதும் அனேக தடவைகள் பறந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-143-6-5]

## "கிளினிக்" சிகிச்சைகள் மீண்டும் ஆரம்பமாகின

யாழ்ப்பாணம், ஆக. 6

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் ''கிளினிக்''குகளில் மீண்டும் சிகிச்சை அளிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் கிளினிக் நோயாளருக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

போதனா வைத்தியசாலை மானிப்பாய்க்கு மாற்றப்பட்டபின் கிளினிக் நோயாளருக்கான சிகிச்சை அடிக்கடி ஸ்தம்பித்து வந்தது.

தற்போது, ஆஸ்பத்திரியில் பணிபுரிபவர்களின் பாதுகாப்புக்குச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு உத்தரவாதம் அளித்துள்ளதைத் தொடர்ந்து, டாக்டர்களில் அனேகமானவர்கள் ஒழுங்காகச் சமுகமளிக்கிறார்கள்.

'கிளினிக்' நோயாளர்களுக்கு, திகதி கவனிக்கப்படாமல் உரிய நாட்களில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதேவேளை ''எக்ஸ்றே'' ஈ. சி. ஜி. பிரிவுகளும் கடந்த திங்கட்கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளன. (அ-15)

## ஹெலி தாக்குதல்

திருநெல்வேலி, செப். 6

நேற்றுக் காலை 9.00 மணி அளவில் நாச்சிமார் கோவிலடி, கொக்குவில், ஆறுகால் மடம் பகுதிகளில் ஹெலிக்கொப்டரில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இதே போன்று ஏழாலை, குப்பிளான் பகுதிகளிலும் ஹெலி தாக்குதல் நடத்தியது. (இ-143)

## மற்றும் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், செப்.6

பருத்தித்துறைக் கடலில் கடந்த திங்கட்கிழமை இரவு அகதிகள் சென்ற படகு மீது கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித்தாக்குதலில் இறந்தோர் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்தள்ளது.

மானிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலைப்பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொன்னம்பலம் நந்தகுமார் (வயது 27) நேற்று மரணமானார். (இ-15)

## ஆழியவளையில் இரவில் கரை இறங்க முற்பட்ட படையினர் மீது தாக்குதல்

வடமராட்சி கிழக்கில் ஆழியவளையில் சிறிலங்கா கடற்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேகடந்த வார இறுதியில் — இரவு வேளையில் கடும் மோதல் இடம்பெற்றது.

கடற்படையினர் படகு மூலம் வந்து கரையிறங்க முற்பட்டபோதே, அவர்களை தடுத்து விடுதலைப் புலிகள் தாக்கினர்,

இந்தத்தாக்குதலை அடுத்து கடற்படைப்படகுபின்வாங்கி நடுக்கடலுக்குச் சென்றது.

அங்கிருந்துகடற்படையினர் குடியிருப்புபகுதிகளை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

இதனால் வீடுகள் சில சேதமடைந்தன. மரங்கள் பல முறிந்தன. (ஒ-144)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

# கண்ணீரில் கரையும் 31ஆம் நாள்



செல்வன்

## இராசநாயகம் குயின்ரஸ்

(யா/புனித சம்பத்திரிசியார் கல்லூரி 7,B ஆண்டு மாணவன்)

அன்னையின் மடியில்: 21 — 03 — 1978

ஆண்டவர் மகிமையில்: 07 — 08 — 1990

சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் ஏனெனில் விண்ணரசு இத்தகையோரதே.

— இயேசு —

07-08-90 அன்று மானிப்பாயில் விமானக் குண்டுக்குப் பலியான செய்தி கேட்டு வந்து ஆறுதல் கூறிய யாவர்க்கும் நன்றி பல. அன்னாருக்காக 07-09-90 காலை 6.00 மணிக்கு புதுமடம் கர்த்தர் தேவாலயத்தில் இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் வாடும்;
இ. இராசநாயகம் குடும்பத்தினரும், ஏனையோரும்.

புதுமடம்,
உடுவில் தெற்கு,
மானிப்பாய்.
06-09-90

[14143]

# திடீர் தேர்தல் நடந்தால் ராஜீவ் பிரதமர் ஆவார்?

புதுடில்லி, செப். 5

இந்தியாவில் இன்று ஒரு பொதுத் தேர்தல் நடந்தால் யார் பிரதமராக வருவார்?

இது பற்றிய கருத்துக் கணிப்பு ஒன்றை பிரபல ஆங்கில வாரசஞ்சிகை 'இன்டியா ருடே' நடத்தியது.

44 சதவீதமானோர் திரு. ராஜீவ்காந்தி பிரதமராக வருவதையே விரும்புகின்றனர் என்பது அக்கருத்துக் கணிப்பில் வெளியாகியது.

36 சதவீதத்தினர் மட்டுமே திரு. வி. பி. சிங் பிரதமராக இருப்பதை விரும்புகின்றனர். (இ - எ)

# நாளாந்தம் அன்னதானம்

யாழ்ப்பாணம், செப். 6

பண்டத்தரிப்பு, பிரான்பற்று பெரியவளவு முருகன் தேவஸ்தான வருடாந்த உற்சவத்தின் போது பூங்காவனத் திருவிழா (நேற்று) வரை தினமும் அன்னதானம் வழங்கப்பட்டது.

அன்னதான காலத்தில் ஆலயச் சுற்றாடலில் ஹெலித் தாக்குதல் எதுவும் நடைபெறவில்லை என்றும் —

அடியார்கள் பெரும் எண்ணிக்கையில் வந்து தினமும் முருகனைத் தரிசித்தும் சென்றனர் என்றும் — ஆலய பரிபாலன சபையினர் அறிவிக்கின்றனர். [அ]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## கிருஷ்ணர் இரத்தின-சபாபதிப்பிள்ளை

(பொலீஸ் உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) (4672)

தோற்றம்; 30-11-1938
மறைவு: 08-08-1990

என் அன்புத் தெய்வமே! குடும்பத்தின் ஒளிவிளக்காய் அயலவர் நண்பனாய், பிள்ளைகள் நல்வழி காட்டியாய் வாழ்ந்து, மறைந்து 07-09-1990 இல் 31நாட்கள் ஆகுகின்றன. உங்கள் நினைவு என்றென்றும் மறையாது,

அத்துடன் எனது கணவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் உதவி செய்த உற்றார், உறவினர்கட்கும், நண்பர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றேன்.

திருமதி
இ. ஞானம்பிகாவதி.
கல்லை வேம்படி,
சுழிபுரம்.

(14140)

# ஏறாவூரில் சகோதரர்கள் வெட்டிக்கொலை

வட்டுக்கோட்டை, செப். 6

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடியைச் சேர்ந்த இரு சகோதரங்கள் ஏறாவூரில் முஸ்லீம் குண்டர்களால்வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஏறாவூரில் மின்சார அத்தியட்சகராக பணிபுரிந்த தர்மலிங்கம் கருணாகரன் என்பவரும் அவரது சகோதரர் நடராசா என்பவருமே இவ்வாறு கொலையுண்டவர்கள் ஆவர்.

ஏறாவூர்ப் பகுதியில் வன்செயல்கள் ஆரம்பமானதைத் தொடர்ந்துமட்டக்களப்புக்கு அகதிகளாகத் தங்கள் குடும்பங்களுடன் இவர்கள் சென்றிருந்தனர் எனவும்-

இடையில் தாம் இருந்த வீடுகளைப் பார்க்கச் சென்ற போதே கொலை செய்யப்பட்டார்கள் என்று அறிய வந்துள்ளது.

இவர்களின் குடும்பங்கள் இன்னமும் மட்டக்களப்பிலேயே தங்கி உள்ளன. [அ-161]

## இடம்பெயர்ந்.,,.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றும் பங்கீட்டு அடிப்படையில் இலவசமாக பொருள்களைப் பெறலாம. உணவு முத்திரை, ஜனசக்தி கார்ட் உள்ளவர்களும் அவ்வாறே பங்கீட்டுப் பொருள்களை இலவசமாகப் பெறலாம்.

★ 700 ரூபாவுக்கும் 1,499 ரூபாவுக்கும் இடையில் வருமானம் பெறுபவர்கள் தொழில் இழந்திருந்தால் விசேட பெர்மிட்டுக்களை உதவி அரசாங்க அதிபர்கள் வழங்குவார்கள். அவர்களும் பங்கீட்டு அடிப்படையில் இலவசமாக உணவுப் பொருள்களைப் பெறலாம்.

★ 1500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்கள் தமது பங்கீட்டு அட்டையைச் சமர்ப்பித்து பணம் செலுத்தி பங்கீட்டுப் பொருள்களைப் பெறலாம்.

சகல உதவிஅரசாங்க அதிபர்களும் கிராம சேவையாளர்களும்இந்ததிட்டத்தை உடன் அமுல் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். (அ-3)

## ஸ்ரீலங்கா----

[1ஆம் பக்கத்தொடர்ச்சி]

யாழ்ப்பாணம் செல்வது என்பதே அவர் எடுத்த அசைக்க முடியாத முடிவு. உடன் செயலில் இறங்கினார்.

திருகோணமலை பிரிமா ஆலையில் இருந்து பருத்தித்துறைக்குப் புறப்பட இருந்த கப்பலுடன் இணைக்கப்பட்டிருந்த இழுவைப் படகில் (''பாஜ்'') அவர் எவருக்கும் தெரியாமல் ஒட்டிக்கொண்டார்; அதாவது ''நைசாக'' ஏறிக்கொண்டார்.

கப்பல் புறப்பட்டது. கப்பல் மாலுமிகள் எவரும் அவரைக் கவனிக்கவில்லை. ''உல்லாச''மாக அவரது பயணம் தொடர்ந்தது.

மா மூடைகளில் ஒரு பகுதியை முல்லைத்தீவில் இறக்குவதற்காக கப்பல் அங்கு தரித்து நின்றது.

அப்போதுதான் விஷயம் அம்பலத்துக்கு வந்தது. இணைப்புப் படகில் ஒருவர் இருப்பதை கப்பல் கப்டன் கவனித்துவிட்டார்.

விவரத்தைக் கேட்டறிந்து [illegible] இழுவைப் படகை [illegible] துறைக்குக் கொண்டுவந்து விட்டார். (ஒ-3)

# மலிவு விற்பனை

சுத்தமாக்கப்பட்ட, தரம் வாய்ந்த இறைச்சிக் கோழி (Dressed Chicken) மிக மலிவான விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

காலை முதல் மாலை வரை எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

குறைந்த அளவிலேயே கையிருப்பு உண்டு.

வாருங்கள்! வாங்குங்கள்!!

392. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[உதயன் பணிமனைக்கு அருகில்]

[C-5178]

# நிவாரணம் கோரி மகஜர்

கொழும்புத்துறை, செப். 5

தீவுப் பகுதி மக்கள் தமக்கு நிவாரணம் வழங்குமாறு யாழ். அரசாங்கஅதிபருக்கும் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளருக்கும் மகஜர் அனுப்பி உள்ளனர்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இல்லாததால் நெடுந்தீவு மற்றும் தீவுப் பகுதி மக்கள் பட்டினியை எதிர் நோக்கி உள்ளனர் என்று மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-30)

# அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 6

சாவகச்சேரி கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட சகல கொத்தணி அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கொத்தணி அதிபர்கள் தத்தமது பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களின் முகவரிகளை தம்முடன் எடுத்து வருமாறும்கோரப்பட்டுள்ளது

# சிமெந்து

யாழ். மாவட்டத்தில் சிமெந்துக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (இ-30)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## திரு. விஸ்வலிங்கம் செல்வக்குமார்

2ஆம் லெப்டினன்ட் நிஷாந்தன்
(பருத்தித்துறை)

வீர ஜனனம்: 24 - 10 - 1971
வீர மரணம்: 05 - 08 - 1990

எதிரியின் காவல் அரணை
தாண்டி நடந்தாய்
கோட்டை மதிலில் ஏறி
எழுந்து நிமிர்ந்தாய்

கோட்டையில் கொடியினை ஏற்றவே
கொடும் புலியாய்ப் பாய்ந்தாய்
ஞானத்தில் ஒளிர்ந்தாய் வீரத்தால்
ஈழத்தில் மலர்ந்தாய் உன் தியாகத்தால்

வேங்கையே நீ சாகவில்லை - உன்
ஆயுதங்கள் கை மாறுமே தவிர
இலட்சியம் மாறப் போவதில்லை
இது உறுதி

உன் பிரிவால் துயருறும்:
— குடும்பத்தினர்.

லூர்து மாதா கோயில் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை. [சி-5184]

# மரண அறிவித்தல்கள்

திரு.

## கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து

(இளைப்பாறிய பிரதம லிகிதர்)

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து அவர்கள் 03 - 09 - 1990 அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் நாகரத்தினத்தின் (இளைப்பாறிய ஆசிரியை, வீரசிங்கம் மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், திருமதி கந்தையா சின்னம்மாவின் அன்புச் சகோதரரும், திருமதி பசுவதி குமாரவேல், திருமதி நாகேந்திரம் தனபாலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை, டிறிபேக் கல்லூரி), காலஞ்சென்ற முருகேசு வைரமுத்து ஆகியோரின் மைத்துனரும், திருமதி வத்சலா விஜயகுமாரின் பெரிய தகப்பனாரும், கயிலைநாதன், கெங்கேஸ்வரன், சிதம்பரநாதன், இரகுநாதன், கணேஷநாதன், திருமதி கருணாதேவி கணேஷமூர்த்தி, கலைவாணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04 - 09 - 1990 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. இரகுநாதன்.

சங்கத்தானை,
சாவகச்சேரி. [14141]

சிவஸ்ரீ

## குகநேசசர்மா பாலசுப்பிரமணியக் குருக்கள்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்,
பிரதமகுரு ஸ்ரீ ஞானவைரவர் கோயில் அரியாலை)

சிவஸ்ரீ குகநேசசர்மா - பாலசுப்பிரமணியக் குருக்கள் 05-09-1990 சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நேற்று இல. 263, ஆனந்தன் வடலி றோட் அரியாலையில் இடம் பெற்று சித்துப்பாத்தி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்று முடிந்தன என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
பா. வசந்தன் (மகன்)

263, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை. [14142]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப்பகுதிக்கு இடம் பெயரும்

## தீவுப்பகுதி அகதிகள்

ஒட்டுசுட்டான், செப். 6

தீவுப்பகுதிகளில் இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கை காரணமாக வன்னிப் பகுதிக்கும் பலர் இடம் பெயர்ந்துள்ளனர்.

ஒட்டுசுட்டான், முத்து ஐயன்கட்டு, விசுவமடு, உடையார்கட்டு ஆகிய இடங்களில் பெரும் அளவு தீவுப்பகுதி அகதிகள் தற்போது தங்கி உள்ளார்கள்.

இரவில் படகு மூலம் அராலிக் கடலைக் கடந்து சுமார் 75 மைல் தூரம் சைக்கிள்களில் பயணம் செய்து தாம் வன்னிப்பகுதியை அடைந்ததாக அகதிகள் பலரும் தெரிவித்தனர்.

இவர்களில் சிலர் படையினரின் அடிகாயங்களுடன் காணப்பட்டனர்.

இடம் பெயர்ந்து வந்தோரில் பலர் சரவணை, வேலணை, மண்கும்பான் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

(இ - 113)

## மொத்தம் 4ஆயிரம் பேர்:

## மண்டைதீவு அகதிகளுக்கு உடைகள் அவசரம் தேவை

யாழ்ப்பாணம், செப். 6

''மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களில் இருந்து இடம் பெயர்ந்த சுமார் 4 ஆயிரம் பேர் மாற்றுடையின்றி பெரும் கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். அரசு சார்பற்ற நிறுவனங்கள் இவர்களுக்கு உடுபுடைவைகளை வழங்கி உதவவேண்டும்''.

இப்படியான கோரிக்கை ஒன்றை வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. என். தனபாலசிங்கம் விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பெரும் சஷ்டத்துக்கு மத்தியில் வாழும் அந்த அகதிகளுக்கு ஒருவார உணவு நிவாரணம் வழங்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அங்கு மருந்துப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளது. புங்குடுதீவு வைத்தியசாலை மட்டுமே இயங்கி வருகிறது. அங்கு மருந்து வகைகளை அனுப்பி உதவவேண்டியது அவசியம் - என்று கூறப்பட்டுள்ளது.

(ஒ-3-6)

## வவுனியா ஆஸ்பத்திரியை திறக்க உத்தரவு

கொழும்பு, செப். 6

கடந்த திங்கள் வவுனியாவுக்கு விஜயம் செய்த சுகாதார மகளிர் நல அமைச்சர் ரேணுகா ஹெரத் உடனடியாக வவுனியா அரச ஆஸ்பத்திரியைத் திறந்து பொது மக்களுக்கு வைத்திய வசதிகளை அளிக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

ஆஸ்பத்திரியை நடத்துவதற்குத் தேவையான ஊழியர்களை வவுனியாவுக்கு அனுப்பி வைப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

[இ-எ]

## தேர் உற்சவம்

கொக்குவில், செப். 6

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய தேர் உற்சவம் கடந்த திங்கட்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது.

(இ -69)

# அடிப்படை வசதி எதுவுமின்றி அல்லலுறும் அகதிகள் 3,000பேர்

யாழ். நகரில் இருந்து 10 மைல் தொலைவில் உள்ள நாவலடி பூம்புகார், அரியாலை கிழக்கு கிராமங்களுக்கு நமது செய்தியாளர்கள்சென்று பார்த்தபோது அங்கு எமது மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை கண்டறிய முடிந்தது. அவர்கள் நேரில் கண்டவற்றை இங்கு தொகுத்துத் தருகிறார்கள்.

அரியாலையில் இருந்து வயல் வெளிகளின் ஊடாக செல்கிறோம். பனங்கூடல்கள் பின்பு வயல்கள். பின்புபனங்கூடல்கள், பின்பு கடல்.

முதலாவது வயல்வெளியைக் கடந்தபோது வருகிறது நாவலடி.

### பனங்கூடல்

அங்கு ஒரு பனங்கூடலில் 50 குடும்பங்கள், சுற்றிவர பனை ஓலையால் மறைப்புப் போட்டு, சிறு கொட்டில். அவற்றில் சிலவற்றுக்கு கூரை இல்லை சிலவற்றுக்கு 'உரப் பைகள்தான் கூரை. சமையலும் அதன் கீழ்தான். நித்திரையும் அங்குதான்.

சின்னஞ்சிறு பிள்ளைகளுடன் மக்கள்படும் கஷ்டங்கள் பார்ப்பதற்கு எங்கள் மனத்திற்குக் கஷ்டமாக இருந்தது.

மாட்டுவண்டியை வாடகைக்கு விட்டு சீவித்த ஒரு குடும்பத்தைச் சந்தித்தோம்.

எனது கணவர் சுகமில்லாதவர். அவரது இந்த மாட்டு (மாடுகள் சாப்பாடின்றி தூங்கியபடி கிடந்தன) வண்டி மூலம்தான்உழைத்துவாழ்ந்து வந்தோம். இப்போது உழைப்பும் இல்லை உண்ண உணவும் இல்லை என்றார்.

தினமும் தாமும் பிள்ளைகளும் சாப்பிடுவதில்லை என்றும், ஒன்றவிட்ட நாள் (ஏதோ வீடுகளில் சேகரிக்கும் அரிசியைக் கொண்டு) ஒரு நேரம் கஞ்சி குடிப்போம் என்று அழாக்குறையாகத் தெரிவித்தார் அந்தப் பெண்.

### பூம்புகாரில்

அடுத்த வயல் வெளி கழிந் ... பனைவடலி, அங்கு சென்றபோது, பூம்புகார் என்று தெரியவந்தது.

மணல் பரட்பில் மக்கள் கூட்டம் கூட்டமாக இருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

பற்றைக்காடுகளும், பனை வடலியும் நிறைந்த அந்த வெளியில் 200 அகதிக் குடும்பங்கள் வாழ்கின்றன.

பார்த்த இடமெல்லாம் சிறு குடில்கள், அதற்குள் அவர்கள் உடைமைகள்.

அங்கு ஒருவரிடம்விசாரித்த போது, இங்கு அரசு ஒரு தடவை நிவாரணம் தந்தது. பின்பு எந்த உதவியும் வழங்கப்படவில்லை. நாம் வந்து ஒரு மாதமாகிறது. ஆனால் எமக்கு அரசு சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லை. ஏதோ ஒரு நிறுவனம் எமது விவரங்களைக் கேட்டு எழுதியது. எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை என்றார்.

#### அகதி முகாமுக்கு ஒரு விஜயம்

சுகாதார வசதியோ, வைத்திய வசதியோ ஒன்றும் இல்லாத நிலையில் வாழ்க்கையை ஓட்டவேண்டியுள்ளதாகவும் நோய் ஏற்பட்டால் அக்கரைக்குத் [யாழ் நகர்] தான் போக வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

### அரியாலை கிழக்கில்

அரியாலை கிழக்கு பகுதிக்குள் புகுந்தோம். 300 குடும்பங்கள் அங்கு கடற்கரையை அண்டிய பகுதிகளில் சிறு சிறு மரங்களின் கீழும், பனை வடலிகளின் கீழும் குடில்கள் தென்பட்டன மரங்களில் கயிறுகளைக் கட்டி அவற்றின் மேல் ஓலைகளைப் பரவி குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஒரு குடும்பத்தில் பத்துப் பேர் இருந்தால், அவர்களில் பெண்களும், குழந்தைகளும் தான் அந்தக் குடில்களில் தஞ்சம். மற்றவர்கள் மணற் பரப்பில் தான் படுக்கவேண்டும்.

''நிவாரணம் எதுவும் இல்லை. உணவுப் பொருள்களின் விலைகள் விஷம்போல் உயர்ந்துள்ளன. முன்பு ஒரு முழுநாளுக்கு செலவிட வேண்டிய பணம் இப்போது ஒரு நேரத்துக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. சில நேரங்களில் பனம் பழத்தை எடுத்து பிள்ளைகளுக்கு சாட்பாடாகக் கொடுக்க வேண்டியுள்ளது. அதுவும் பனம்பழத்துக்குப் போட்டி இங்கு என்றார் அவர்.

### அடிப்படை வசதி எதுவும் இல்லை

அந்தப் பகுதியில் உள்ள இந்த அகதிகளுக்கு மலசல கூட வசதிகளோ. குடிதண்ணீர் வசதியோ இல்லை. அங்கு உள்ள கிணறுகளில் உவர் நீர் இருப்பதால், மக்கள் குளிக்கக்கூட முடியாதுள்ளதாம்.

மக்கள் இந்த நீரில் குளிப்பதாலும், குடிப்பதாலும் வயிற்றோட்டம், காய்ச்சல் போன்ற நோய்களுக்கு ஆளாகிறார்கள் என்று அங்கிருந்த அகதி ஒருவர் தெரிவித்தார்.

மணற்தறையில் கிணறுகளைக் கிண்டி அதிலிருந்தே தண்ணீரைக் குடிப்பதையும் நேரில் காணமுடிந்தது. ஆரம்பத்தில் சிலர் கடல் நீரைக் குடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்படியாக அடிப்படைத் தேவைகள் கூட இன்றி இன்னல்படும் எமது நிலையைப் பத்திரிகை மூலம் வெளியிட்டு எமக்கு உதவமாட்டீர்களா என்று [illegible] அந்த அகதிகள்.

— அலுவலகச் செய்தியாளர்கள் —

(இ - 6 - 3)

## கூட்டுறவுச் சங்க உறுப்பினர் சந்தாப்பணம் அதிகரிப்பு

கொழும்பு, செப். 6

கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் உறுப்பினராகச் சேருவதற்குரிய சந்தாப்பணம் ஒரு ரூபாவில் இருந்து பத்து ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு அமைச்சர் வீரசிங்க மல்லிமராச்சி அறிவித்திருக்கிறார்.

நூறு ரூபா சந்தாப் பணத்தை உறுப்பினர்கள் பத்துத் தவணைகளில் செலுத்த முடியும் என்றும்—

ஒருவர் உறுப்பினராகச் சேர்ந்து ஆறுமாதங்களின் பின்னரே அச்சங்கத்தில் இருந்து கடன் வசதிகளைப் பெறமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

### மன்னார்

## கட்டுக்கரையைச் சூழ உள்ள விவசாய நிலங்கள் பாழ்

மன்னார், செப். 6

மன்னார் கட்டுக்கரையைச் சூழ உள்ள உயிலங்குளம், முருங்கன் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயப் பிரதேசங்கள் இன்றும் வெறிச்சோடியே காணப்படுகின்றன.

படையினர் சிலாவத்துறையில் இருந்து தள்ளாடிக்கு இப்பகுதியூடாக வந்தபோது பெரும்பாலான குடும்பங்கள் வெளியேறி இருந்தன.

இவர்கள் இன்னும் திரும்பி வரவில்லை.

வட்டக்கண்டல் பகுதியிலேயே இவர்களில் அனேகர் தங்கி உள்ளனர்.

(இ-164)

### மண்டைதீவிலிருந்து

## நோயாளரை வெளியேற்ற உதவுமாறு கோரிக்கை

மண்டைதீவில் இருந்து வெளியேற முடியாத நிலையில் கண்பார்வை அற்றவர்கள், நடக்க முடியாதவர்கள் நோயாளர்கள் பலர் உள்ளனர். இவர்களை மண்டைதீவில் இருந்து வெளியேற்றி இவர்களின் உறவினர்களிடம் சேர்ப்பிக்க உதவவேண்டும்.

மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம், யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

மண்டைதீவுக் கிராமத்தில் மாத்திரம் 15க்கும் மேற்பட்டோர் காணாமல் போய் உள்ளனர். 50கெும் மேற்பட்டோர் க்சால்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் பற்றிய விவரங்களைத் தங்கள் அமைப்பின் மூலம் பெற்றுத்தர முயல வேண்டும்.

இப்படி மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ - 3 - 6)

## தோட்டத்தில் விளைபயிர் அபகரிப்பு

கொக்குவில், செப். 6

கொக்குவில் பகுதித் தோட்டங்களில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது.

போத்தல் 140 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் வாங்கி நீரிறைத்து பயன் பெறும் நேரத்தில் திருடர்கள் விளைபொருள்களை அபகரித்துச் செல்கிறார்களே என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(இ-69)

## செய்திச் சாரம்

### அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், செப். 6

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன சனசமூக நிலையத்தினரும், குமரன் விளையாட்டுக் கழகத்தினரும் கோண்டாவில் வாழ் மக்களிடமிருந்து சேகரித்த 19,484 ரூபாவை கிழக்கு மாகாண அகதிகளுக்கு தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தினூடாக வழங்கினர்.

[இ-5]

### உறவினரைத் தேடும் நோயாளர்

யாழ்ப்பாணம், செப்.6

புங்குடுதீவு வைத்தியசாலையிலிருந்து மானிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இருவர் தங்கள் உறவினர்களைத் தேடுகிறார்கள்.

வேலணைகிழக்கைச்சேர்ந்த திருமதி கார்த்திகேசு சிவக்கொழுந்து சரம்பன் கிழக்கை சேர்ந்த பஸ்தியாம்பிள்ளை இமானுவேல் ஆகிய இருவருமே தங்கள் உறவினர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியாமலும், உறவினர் எவரின் ஆதரவின்றியும் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(அ-5)

### களவு

வட்டுக்கோட்டை, செப். 6

சங்கானை ப. நோ. கூ. சங்க மூளாய் கிளையில் (இல. 11) மா, சீனி, அரிசி மூடைகள் களவாடப்பட்டுள்ளன.

(இ-160)

### கிருஷ்ண ஜயந்தி

பருத்தித்துறை, செப். 6

வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இம் மாதம் 11 ஆம் திகதி ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி விழா நடைபெறவுள்ளது. அன்றைய தினம் கண்ணன் பிறப்பு தரிசனம் நள்ளிரவு 12.00 மணிக்கு நடைபெறும் என ஆலய தர்மபரிபாலன சபை அறிவித்துள்து.

(இ-118)

### சங்கிலியை இழந்தார்

திருநெல்வேலி, செப். 6

ஆலயத்திற்கு வந்தவர் சுமார் ஐயாயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை களவு கொடுத்தார்.

துர்க்கையம்மன் ஆலய சப்பறத் திருவிழாவன்று இச்சம்பவம் இடம் பெற்றது.

தெல்லிப்பளையைச்சேர்ந்த ரஞ்சன் என்பவரே தமது கழுத்துச் சங்கிலியைப் பறிகொடுத்தவர் ஆவார்.

(இ-143)

### பாண் - பணிஸ்

குருநகர், செப். 6

சுன்னாகம், அளவெட்டி, இணுவில் பகுதிகளில் இப்பொழுது பாண், பணிஸ் விற்பனையாகின்றன.

[இ-51]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிமுகாம்களைப் பராமரிக்கும் வேலைகளை நிறுத்துவதற்கு முடிவு!

## அரசு சார்பற்ற நிறுவனங்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 6

யாழ் - மாவட்டத்தில் உள்ள அகதிகள் முகாம்களை பராமரிக்கும் வேலைகளை அரசு சார்பற்ற நிறுவனங்கள் இம்மாத இறுதியுடன் நிறுத்துவதென முடிவு செய்துள்ளன.

அரசு சார்பற்ற நிறுவனங்களின் இணைப்புக்குழுக் கூட்டம் கொக்குவிலில் இவ்வார ஆரம்பத்தில் நடைபெற்ற போதுமேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ் - மாவட்டத்தில் உள்ள அரசுசார்பற்ற நிறுவனங்களே கடந்த மூன்று மாதங்களாக அகதிமுகாம்கள் பெரும்பாலானவற்றில் பராமரிப்பு வேலைகளை மேற்கொண்டு வந்தன.

தற்போது இந்த நிறுவனங்களிடம் நிதியும், உணவுக் கையிருப்பும் முடிவடைந்ததனால் பராமரிப்பு வேலைகளை நிறுத்தவதென அவை ஒன்றாகக் கூடி முடிவுசெய்துள்ளன.

இதேசமயம் —

கப்பல் மூலம் வரும் அத்தியாவசியப் பொருள்களை பங்கீடு செய்யும்போது, அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு கூடுதல் அளவை வழங்கவேண்டும் என்றுகோரும் தீர்மானமும் பிரஸ்தாப கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. [உ-3]

## "வெட்டாதே! வெட்டாதே" !! ஆஸ்பத்திரியில் பெண் புலம்பல்

யாழ்ப்பாணம், செப். 6

மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள பெண் ஒருவர் அடிக்கடி "வெட்டாதே வெட்டாதே; ஓர் உயிரைக் காப்பாற்ற என்னை விடு" என்று புலம்பிக் கொண்டிருக்கிறார்.

சரவணையைச் சேர்ந்த உலகேஸ்வரி செல்லத்துரை (வயது 32) என்பவரே இந்தப் பெண் ஆவார்.

இவர் மனம் குழம்பிய நிலையிலேயே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஊர்காவற்றுறை, வேலணைப் பகுதிகளில் கடந்த வாரம் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட கொலைகளை இவர் நேரில் பார்த்தார் என்று இவரது தாயாரால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## வவுனியாவிலும் மிதிவெடி:

## மைத்துனரை தேடிச்சென்ற பெண் காலை இழந்தார்

வவுனியாவில் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்ட மைத்துனரைத் தேடிச் சென்ற ஒருபெண் மிதிவெடியில் அகப்பட்டு வலதுகாலை இழந்தார்.

கடந்த வெள்ளிக் கிழமை சாளம்பைக் குளத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வைரவர் புளியங்குளத்தைச் சேர்ந்த மகேஸ்வரி சீவரத்தினம் (வயது 48) என்பவரே காலை இழந்தவர் ஆவார். (இ-15)

## கப்பலில் வந்த தபால்கள் சுன்னாகத்தில் தரம் பிரிப்பு

யாழ்ப்பாணம், செப். 6

கப்பல்கள் மூலம் வந்து சேர்ந்துள்ள 500 தபால் பொதிகளும் தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளன.

பாதுகாப்புக் கருதி தபால் பொதிகள் சுன்னாகம் தபாலகத்தில் வைத்து தரம்பிரிக்கப்படவுள்ளன.

இதற்கு வசதியாக சகல உத்தியோகத்தர்களையும் சேவை நோக்கத்தோடு அங்கு சமுகம் தருமாறு யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தரம்பிரிக்கப்படும் தபால்களை சம்பந்தப்பட்ட தபாற்கந்தோர் ஊழியர்கள் அஞ்சல்முறையில் எடுத்துச்செல்லுமாறும் அத்தியட்சகர் கேட்டுள்ளார். (ஒ-5)

## மேகநோய் சிகிச்சைப்பிரிவு இயங்குகிறது

யாழ்ப்பாணம், செப். 6

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் 33ஆம் அறையில் இயங்கிவந்த மேகநோய் சிகிச்சைப்பிரிவு நேற்று முதல் மானிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இச்சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றிய ஊழியர்கள் அனைவரையும் மானிப்பாயில்இயங்கும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரிவுக்கு கடமைக்குவருமாறுபோதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி புஷ்பா சண்முகம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-15)

## ஈராக் மந்திரி மாஸ்கோவுக்கு

பக்தாத், செப்.6

ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக்அஸீஸ் நேற்று சோவியத் யூனியன் தலைநகர் மாஸ்கோவுக்கு அவசரப்பயணம் ஒன்றை மேற்கொண்டு சென்றார்.

வளைகுடா நெருக்கடி குறித்து சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோப்பச்சேவ் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பின்லாந்து தலைநகர் ஹெல்சிங்கியில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ்ஷைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

அதற்கிடையில் ஈராக் வெளியுறவு அமைச்சர். சோவியத் தலைவர்களை சந்தித்துப் பேச மாஸ்கோ சென்றிருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது. (ஒ-எ)

## கோயில் வாசலில் சைக்கிள் திருட்டு

திருநெல்வேலி, செப்.6

ஆலய வாசலில் சைக்கிளை விட்டுச் சென்றவர், சுவாமி தரிசனம் முடிந்து வந்த போது சைக்கிளைக் காணாது ஏமாற்றம் அடைந்தார்.

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலடியில் இச்சம்பவம் நடந்தது.

தலையாளியைச் சேர்ந்த மோகன் என்பவரே சைக்கிளை பறிகொடுத்தவர் ஆவார். [இ-143]

## மானிப்பாயில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப்.6

தேசவிரோத செயல்களில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு தொகுதியினர் நேற்று விடுதலைப் புலிகளினால் மானிப்பாய் தியாகசீலத்தில் வைத்து விடுவிக்கப்பட்டனர். [ஒ-3]

## இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப்.6

நேற்று நண்பகல் வயாவிளானில் இராணுவத்தினரின் சினைப்பர் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

கோண்டாவிலைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் என்னும் இளைஞரே காயமடைந்தவர் ஆவார். (ஒ-5)

## மட்டக்களப்பு எம். பியாக ஜோசப்

கொழும்பு, செப். 6

மட்டக்களப்பு மாவட்ட எம். பியாக திரு. பரராஜசிங்கம் ஜோசப்நேற்று நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிப்பட்டியலில் இருந்து எம். பியாக இவர் நியமனம் செய்யப்பட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பட்டியல் மூலம் எம் பியாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. சாம் தம்பிமுத்து அண்மையில் அகால மரணமானதைத் தொடர்ந்து, அவரின் இடத்துக்கு திரு. ஜோசப்பை தேர்தல் ஆணையாளர் நியமித்தார். (இ-எ)

## ஒரு லட்சத்து 2 ஆயிரம் அகதிகள்

சென்னை, செப். 6

தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழரின் எண்ணிக்கை ஒருலட்சத்து 2 ஆயிரம் என்று அகதிகள் மறுவாழ்வுத்துறை சிறப்பு அதிகாரி திரு. சி.எம். இராம்தாஸ் நேற்றுத் தெரிவித்தார். (ஒ-எ)

## சூறாவளிக்கு 85 பேர் பலி

பீக்கிங், செப்.6

சீனாவில் வீசிய கடும் சூறாவளி காரணமாக 85பேர் உயிரிழந்தனர். சுமார் ஆயிரம் பேர் காயமடைந்தனர் என்று பீக்கிங் அரசு அறிவித்தது. [அ-எ]

## பயிலுநர் தாதிகள்

கொக்குவில், செப். 6

கடந்த இரண்டு மாதங்களாக பயிலுநர் தாதிகளுக்கு எதுவித கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. (இ-69)

## விளையாட்டு வினையானது!

## 4 வயது குழந்தை சுட்டு இராணுவ மேஜர் பலி!

பாங்கொங், செப். 6

விளையாட்டு சில வேளைகளில் வினையாகி விடுவதுண்டு. இப்படி ஒரு சம்பவம் கடந்த ஞாயிறு தாய்லாந்தில் இடம்பெற்றது.

இராணுவ மேஜர் ஒருவர் தமது நண்பரின் வீட்டுக்குச் சென்று — நண்பரின் 4 வயதுக் குழந்தையிடம் கைத்துப்பாக்கியை விளையாட்டாகக் கொடுத்தார்.

துப்பாக்கி உண்மையானதா, போலியானதா என்பது தெரியாத அந்தக் குழந்தை அதைக் கையில் வைத்திருந்தபடியே மேஜரை உற்றுப் பார்த்தது.

அப்பொழுது மேஜர் "என்னை சுடு பார்க்கலாம்" என்று விளையாட்டாகக் கூறினார். குழந்தை சிறிதும் தாமதியாது துப்பாக்கியின் விசையைத் தட்டிவிட்டது.

"டுமீல்" என்ற சத்தம் கேட்டது. மேஜர் அப்படியே சரிந்து வீழ்ந்தார். இரத்தம் பெருக்கெடுத்து ஓட, அவர் துடிதுடித்து மரணமானார். (ஒ-5)

## கிளிநொச்சி ஆசிரியர்களுக்கு 3 மாதமாக சம்பளம் இல்லை

கிளிநொச்சி, செப். 6

கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களுக்குக் கடந்த மூன்று மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை.

கல்வித் திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் எவரும் கிளிநொச்சி கல்வித்திணைக்கள அலுவலகத்துக்கு வருகை தராததாலேயே சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி கல்வித்திணைக்களம் தற்போது எங்கே இயங்குகின்றது என்பது ஆசிரியர்கள் மத்தியில் கேள்விக்குறியாக இருந்து வருகிறது. [இ - 76]

## குழந்தைகள் கூட்டம் மீது ஏறிச் சென்ற லொறி!

## 15 பாலகர்கள் துடிதுடித்துப் பலி!!

பஸ்ஸுக்காக காத்து நின்ற பச்சிளம் குழந்தைகள் மீது அசுர வேகத்தில் வந்த லொறி ஒன்று பயங்கரமாக மோதி ஏறிப் பாய்ந்து சென்றது.

லொறிக்குள் அகப்பட்ட 4 வயதுக்கு உட்பட்ட 15 பாலகர்கள் நசிந்துதுடிதுடித்து மடிந்தனர். அங்கு நின்ற வயோதிபர் ஒருவரும் உயிரிழந்தார்.

மனதை உருக்கும் இந்தச் சம்பவம் நேற்றுப் பகல் தமிழ் நாட்டில், திருப்பராயத்துறை நகரில் இடம் பெற்றது.

படுகாயங்களுக்கு ஆளான 20 குழந்தைகள் கவலைக்கிடமான நிலையில் திருச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். (ஒ-எ)

## வேலணை உ. அ. அதிபரின் ஆவணங்கள் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், செப். 6

வேலணை உதவி அரசாங்க அதிபர் செயலகம் சேதமடைந்த போதும் ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன என்று உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. சந்திரசேகரம் தெரிவித்தார்.

பொம்மர் குண்டு வீச்சால் செயலகம் சேதமடைந்ததை அடுத்து செயலகம் மூடப்பட்டது. முக்கிய ஆவணங்கள் யாவும் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பாக உதவி அரசாங்க அதிபர் விடுதியில் வைக்கப்பட்டுள்ளன — தற்காலிகமாக அங்கு செயலகம் இயங்குகிறது என்றும் அவர் தெரிவித்தார். (இ-6-3)

## மட்டக்களப்பு அகதிமுகாம்: பலருக்கு வயிற்றோட்டம்

மட்டக்களப்பு, செப். 6

மட்டக்களப்பு மாவட்ட அகதிமுகாம்களில் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும் அகதிகள் பலர் வயிற்றோட்டம் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவி வந்த உணவுத்தட்டுப்பாடு 75 சதவீதம் நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டதாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன் தெரிவித்தார். (இ - எ)

## முல்லைத்தீவு செயலகம் புதுக்குடியிருப்புக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், செப். 6

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக முல்லைத்தீவு செயலகம் முற்றாகச் சேதமடைந்ததை அடுத்து புதுக்குடியிருப்புக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

செயலகத்தில் இருந்த முக்கிய ஆவணங்கள் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கும், மற்றைய 4 உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்கும் மாற்றப்பட்டுள்ளன.

அதே சமயம் வவுனியா உள்ளூராட்சி திணைக்களக் கட்டடமும் சேதமடைந்துள்ளது. (இ-3)

## திரிபாதி உடல்நிலை கவலைக்கிடம்

புதுடில்லி, செப். 6

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான கமலாபதி திரிபாதியின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

அவர் கோமா நிலையில் மயங்கி இருப்பதாக புதுடில்லியில் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறை வேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org